**இலங்கை கிரிக்கெடடின் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கிரிக்கெட்டின் (''இலங்கை கிரிக்கெட்'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து இலங்கை கிரிக்கெட்டின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, இலங்கை கிரிக்கெட்டின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

இலங்கை கிரிக்கெட்டின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை கிரிக்கெட்டின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான்

முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்டபான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுக்கான தொடர்புடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 16 இன் 22 ஆம் பந்தியின் பிரகாரம் குத்தகைதாரர் சொத்துக்களுக்கான உரிமை மற்றும் குத்தகைப் பொறுப்பை அங்கீகரித்தல் வேண்டும். இருந்த போதிலும் 2020 ஆகஸ்ட் 27 இல் சிங்கள விளையாட்டுக் கழகத்தை | கருத்துரை குறித்துக் கொள்ளப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டு கணக்குப் புத்தகங்களில் தேவையான பதிவுகள் மேற்கொள்ளப்படும். | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் பிரகாரம் சகல சொத்துக்களின் பயன்பாட்டு உரிமை மற்றும் குத்தகைப் பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஐந்து வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவது தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட குத்தகை ஒப்பந்தம் சொத்துக்களின் பயன்பாட்டு உரிமையின் கீழ் அங்கீகரிக்கப்படாததுடன் வருடத்திற்கான ரூபா 4 மில்லியன் ஆன குத்தகைப் பொறுப்பு நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 இன் B 5.5.4 பந்தியின் பிரகாரம் ஒரு தனிப்பட்ட கருவியின் அடிப்படையில் ஆயுட்காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற கடன் இழப்புக்களை அளவிடுவதற்கு தேவையற்ற செலவு அல்லது முயற்சியின்றி கிடைக்கக்கூடிய நியாயமான மற்றும் ஆதரவான தகவல்கள் நிறுவனத்தில் காணப்படாவிட்டால் அது ஆயுட்கால இழப்புக்களை கூட்டு அடிப்படையில் மதிப்பிட வேண்டும். இருந்த போதிலும் இந்நியமத்தின் தேவைப்பாட்டிற்கு முரணாக நிதிக் கருவிகளின் கீழ் காட்டப்பட்டிருந்த 12 தனிப்பட்ட அனுசரணைக்கான பெற வேண்டிய மிகுதிகளின் மொத்தம் 582.6 மில்லியன் கூட்டு அடிப்படையில் கணக்கிடப்பட்டிருந்தது. இதனால் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த இழப்பு கட்டணங்களின் சரியான தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | தனித்தனியாக பெற வேண்டிய அனுசரணைகளைக் கருத்திற் கொள்ளும் போது முகாமைத்துவத்தின் கருத்து மிகுதித் தொகை அறவிடப்பட முடியுமென்பதாகும். அதனை அடிப்படையாகக் கொண்டே பொது இழப்பீடொன்று செய்யப்பட்டிருந்தது. | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கியதாக இழப்பீட்டு நட்டங்கள் கணக்கிடப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து தேவையான அனுமதியைப் பெற்றுக் கொள்ளாத காரணத்தினால் ரூபா 47,438,675 பெறுமதியான நான்கு செயற்திட்டங்கள் நிரந்தரமாக நிறுத்தப்பட வேண்டியிருந்தன. இருந்த போதிலும் மீளாய்வாண்டில் நிறுத்தப்பட்ட செயற்திட்டங்களின் பெறுமதி ரூபா 47,438,675 ஆனது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனவே நிதிக்கூற்றுக்களில் 2020 ஆம் வருடத்திற்கான நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் அந்த அளவினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | செய்யப்பட்ட வேலைகளை எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கும் மற்றும் மேலதிகக் கொடுப்பனவுகளை அறவிடுவதற்குமான சாத்தியத்தை இலங்கை கிரிக்கெட் மதிப்பீடு செய்துள்ளது. | நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியவை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2018 ஆம் ஆண்டில் இலங்கையில் தெற்காசியச் சுற்றுலாவுடன் தொடர்பான ரூபா 34,938,077 (ஐ.அ.டொலர் 187,085) பெறுமதியான அனுசரணை உரிமைகளுக்காகப் பெற வேண்டிய வருமானம், அந்த அனுசரணைக் கம்பனியிடமிருந்து பெற வேண்டியவையாக இருந்த போதிலும் சந்தேகத்திற்கிடமான மற்றும் முறையற்ற தலையீடுகள் மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களில் தாக்கமளித்திருந்தமையால் அனுசரணையாளர்களிடமிருந்து மேற்குறிப்பிடப்பட்ட | பெற்றுக் கொள்ளப்பட்ட சட்ட அபிப்பிராயத்தின் அடிப்படையில் அந்தத் தொகையை அறவிட முடியுமென முகாமைத்துவம் கருதுவதால் நிதிக் கூற்றுக்களில் எவ்வித இழப்புக்களும் அங்கீகரிக்கப்பட வில்லை. | பேரேட்டு நடவடிக்கைகளிலிருந்து பெற வேண்டிய வருமானங்களை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணத்தை மீளப் பெற்றுக் கொள்வது நிச்சயமற்றதாக உள்ளது. | | |
| (ஆ) | 5 வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாது நிலுவையாகவுள்ள மொத்தம் ரூபா 38,229,740 ஆன நிறுத்தி வைத்தல் வரியானது நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்படாது காணப்பட்டது. | நிறுத்தி வைத்தல் வரியை அறவிடுவதற்கான நடவடிக்கைகளை இலங்கை கிரிக்கெட் எடுத்துள்ளது. | நிதிக் கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களை செய்வதற்கு அல்லது பெற வேண்டியவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கான ஆவணங்கள் காணப்படாமையால் இலங்கை கிரிக்கெட்டினால் ரூபா 41,495,183 கூட்டுத் தொகையான பதினெட்டு வரவு மிகுதிகள் பதிவழிக்கப்பட்டிருந்தது. | இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட செயன்முறை நியாயமானது. | கடன்கள் பதிவழிக்கப்படுவதற்கு முன்னர் அக் கடன்களை அறவிடுவதற்கான சாத்தியங்கள் தொடர்பாக முழுமையாகப் பரிசோதிக்கப்படல் வேண்டும். |

**1.6.2 செலுத்தப்பட வேண்டியவை**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2 தொடக்கம் 3 வருட காலமாக ரூபா 16,020,449 கூட்டுத்தொகையான ஏனைய செலுத்த வேண்டிய மிகுதிகள் தீர்க்கப்படாது காணப்பட்டன. | 2021 ஆம் ஆண்டில் இக்குறிப்பிடப்பட்ட செலுத்த வேண்டிய மிகுதிகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் இலங்கை கிரிக்கெட்டினால் எடுக்கப்படும். | பொறுப்புக்கள் உறுதி செய்யப்பட்ட பின்னர் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேணடியதுடன். மற்றும் தீர்க்கப்படுவதற்கு மேலும் பொறுப்புக்கள் இல்லாவிட்டால் அது உரிமை மூலதனத்திற்குப் பதிவளிக்கப்படல் வேண்டும். |

**1.6.3 முற்பணங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 தொடக்கம் 2019 ஆன வருடங்களில் கிரிக்கெட் | நிலுவையிலுள்ள ஆவணங்களைச் | முற்பணங்களை அறவிடுவதற்கு |

| | | |
|---|---|---|
| சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த முற்பணங்களின் கூட்டுத் தொகையான ரூபா 10,292,337 ஆனது அறவிடப்படாது நிதிக் கூற்றுக்களில் விளையாட்டுப் போட்டிகளுக்கான முற்பணங்களாகக் காட்டப்பட்டிருந்தது. | சேகரிப்பதற்கு இலங்கை கிரிக்கெட் நடவடிக்கை எடுத்துள்ளது. | விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 211,234,954 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை 470,444,762 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,730,434,952 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. வருமானம் ரூபா 517,904,180 ஆல் குறைவடைந்தமையே அந்த பின்னடைவிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தம்புள்ள மற்றும் பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்திற்கான நீச்சல் குளச் செயற்திட்டங்களுக்காக 2018 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியில் திரட்டல் முற்பணம் மற்றும் மதியுரைக் கட்டணங்களாக ரூபா 115,138,947 ஆன மொத்தத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இச்செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 6 மாதங்களுக்குள் முடிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், இத்திட்டங்க்ள 6 மாத கால தாமதத்தின் பின்னர் முறையே 2019 திசெம்பர் 18 மற்றும் 2019 திசெம்பர் 04 திகதகளில் தொடங்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக மீளாய்வாண்டின் இறுதி வரையில் செயற்திட்டங்களின் நிர்மாணங்கள் முடிக்கப்பட்டிருக்க வில்லை. | தாமதத்திற்கான பிரதான காரணம் கொவிட் 19 தொற்றுநோய் என்பதுடன் 2021 ஆம் ஆண்டில் செயற்திட்டங்களை முடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டிருந்தன. | நிர்மாணப் பணிகளை முடிந்தளவு விரைவில் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| | **தற்போதுள்ள கட்டிடத்தை மறுசீரமைக்கும் பணிகள் - ஆர்.பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் மைதானம்** | | |
| (அ) | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் பிரிவின் பிரகாரம் திரட்டல் முற்பணமாக செலுத்தக் கூடிய அதிகபட்ச தொகையானது ஒப்பந்தத் தொகையின் 20 சதவீதம் ஆகும். இருந்த போதிலும், மேற்குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டிற்கு முரணாக ரூபா 157,635,000 அல்லது ஒப்பந்தத் தொகையில் 40 சதவீதம் திரட்டல் முற்பணமாக இலங்கை கிரிக்கெட்டினால் செலுத்தப்பட்டிருந்தது. அதாவது ரூபா 78,842,500 ஆன தொகையான முற்பணம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் நிர்மாணம் 2020 மே 20 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அது 2021 மே வரையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 40% முற்பணம் தேவையான அங்கீகாரத்துடன் மற்றும் 100 சதவீதமான முற்பணப் பாதுகாப்பும் பெறப்பட்ட பின்னரே வழங்கப்பட்டிருந்தது. | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் திரட்டல் முற்பணம் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் பிசியோ தெரபி பிரிவிற்காக இலங்கை கிரிக்கெட் ரூபா 24,270,099 பெறுமதியான 2 பிசியோதெரபி உபகரணங்களை கொள்வனவு செய்திருந்தது. இலங்கை கிரிக்கெட்டின் பெறுகை கைநூலின் vi(2.5) ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 1 மில்லியன் தொடக்கம் ரூபா 25 மில்லியன் வரையான பெறுகைகளுக்கு திறந்த பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும். இருந்த போதிலும் விலை மனுக்கள் கோரப்படாமல் இந்த 2 உபகரணங்களும் முறையே பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத வழங்குனரிடமிருந்து கொள்வனவு | பயனாளிகள் பிரிவு மற்றும் தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலேயே உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. | சபையின் பெறுகை நடைமுறை சரியான தேவைக்கேற்ப பின்பற்றப்பட வேண்டும். |

செய்யப்பட்டிருந்தன. ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலம் மேற்குறிப்பிட்ட பெறுகைகளை நிறைவு செய்வதற்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குனரிடமிருந்து செயலாற்றல் பிணையை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையுடன் வழங்குனர்களுடன் ஒப்பந்தங்கள் எதுவும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை..